செய்திச் சுருள்

ராகுல்காந்தி கைதைக் கண்டித்து காங்கிரஸார் ஆர்ப்பாட்டம்



திருச்சி ஆட்சியரகம் அருகே வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினர்.

திருச்சி, அக். 8: தலைமை தேர்தல் ஆணையரை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை கைது செய்ததை கண்டித்து, திருச்சியில் காங்கிரஸ் கட்சியினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாநகர் மாவட்டத் தலைவரும், மாமன்ற உறுப்பினருமான எல். ரெக்ஸ் தலைமை வகித்தார். இதில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ஜனநாயகத்துக்கு விரோதமாக எஸ்ஐஆர் பணிகளில் குளறுபடி செய்த தலைமை தேர்தல் ஆணையரை கண்டித்து நாட்டு மக்களுக்காக போராடியபோது பாஜக அரசு கைது செய்ததை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட பொருளாளர் முரளி, கோட்டத் தலைவர் பிரியங்கா படேல் முன்னிலை வகித்தனர். இதில், மாநில செயலாளர் இளங்கோ, நிர்வாகி கிளமெண்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, பாஜக அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

கோயில் நிலங்கள் ஏலம் தடுத்து நிறுத்தம்

செயல் அலுவலர் புகார்

துறையூர், அக். 8: திருச்சி மாவட்டம், சோபனபுரத்தில் கோயில்களுக்கு சொந்தமான நிலங்களின் குத்தகை பொது ஏலத்தை நடத்த விடாமல் தடுத்து, தன்னிடம் தகராறு செய்தவர்கள் மீது நடவடிக்கைக் கோரி செயல் அலுவலர் போலீஸில் வியாழக்கிழமை புகார் அளித்தார்.

இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான கொப்பம்பட்டி சப்தரிஷீஸ்வரர் கோயில் நிர்வாகத்துக்கு உள்பட்ட காசி விஸ்வநாதர் கோயில், பூஞ்சோலையம்மன் கோயில், வேணுகோபால் கோயில் உள்ளிட்ட கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் சோபனபுரத்தில் உள்ளது.

இந்த நிலங்களின் ஆண்டு குத்தகை பொது ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஏலம் கோர விரும்புபவர்களை முன்பணம் கட்டுமாறு செயல் அலுவலர் ராஜகோபால் கூறினார். அப்போது, கோயில் நிலங்களை வழக்கமாக குத்தகைக்கு எடுப்பவர்கள் புதிதாக வேறு சமூகத்தினர் யாரையும் ஏலம் கோர அனுமதிக்கக் கூடாது என்றனராம். இதற்கு செயல் அலுவலர் ஒப்புக் கொள்ளாமல் பொது ஏலம் விட முயன்றார். இதனால் அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது. பொது ஏலத்தை எதிர்த்தவர்கள் செயல் அலுவலரிடமிருந்து ஏல நோட்டை பறித்து எறிந்து, ஏலம் நடைபெறுவதை தடுத்தனர்.

இதுதொடர்பாக, தன்னை பணி செய்ய விடாமல் தடுத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி செயல் அலுவலர் உப்பிலியபுரம் போலீஸில் புகார் அளித்தார்.

எரிந்த நிலையில் பெண் எலும்புக்கூடு மீட்பு வழக்கில் 3 தனிப்படைகள் அமைப்பு

மண்ணச்சநல்லூர், அக். 8: திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், வாழ்மால்பாளையம் கீழூர் கிராமத்தில் எரிந்த நிலையில் பெண்ணின் எலும்புக் கூடு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த 3 தனிப்படைகள் வியாழக்கிழமை அமைக்கப்பட்டுள்ளன.

வாழ்மால்பாளையம் கீழூர் கிராம சுடுகாட்டில் உடல் முழுவதும் எரிந்த நிலையில் மண்டை ஓடு இல்லாத பெண்ணின் எலும்புக்கூடு புதன்கிழமை கண்டெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் வியாழக்கிழமை திருச்சி சரக டி.ஐ.ஜி சிபி சக்ரவர்த்தி, மற்றும் புதுக்கோட்டை மாவட்ட எஸ்.பி. ரவீந்திர குமார் குப்தா (திருச்சி பொறுப்பு) ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக, ஜீயபுரம் டி.எஸ்.பி. சங்கர் தலைமையில், காவல் ஆய்வாளர்கள் கிருபா நிதி (மண்ணச்சநல்லூர்), ர. பிரபு (ராம்ஜி நகர்), கருணாகரன் (துறையூர்) உள்ளிட்டோரை கொண்ட 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. சுடுகாட்டில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு உள்ளிட்டவை ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பாதிரியார் பயிற்சி பெற்று வந்த இளைஞர் தற்கொலை

திருச்சி, அக். 8: திருச்சியில் அண்மையில் பூச்சி மருந்தை குடித்த, பாதிரியார் பயிற்சி பெற்று வந்த இளைஞர் மருத்துவமனையில் புதன்கிழமை உயிரிழந்தார்.

திருச்சி மாவட்டம், ஓலையூரைச் சேர்ந்தவர் ஆரோக்கியராஜ் மகன் அஜய் விக்டர் (26). இவர், சிவகாசியிலுள்ள பைபிள் கல்லூரி ஒன்றில் பாதிரியார் பயிற்சி பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், அண்மையில் அவருடைய தாயைத் தொடர்பு கொண்ட அஜய் விக்டர், பாதிரியார் பயிற்சி பெறுவதற்கு விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார். இதையடுத்து, திருச்சிக்கு கடந்த 2-ஆம் தேதி வந்துள்ளார். அதன்பின், ஓலையூரில் உள்ள தனது சகோதரி வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த 5-ஆம் தேதி இரவு திருச்சி மத்திய பேருந்து நிலையப் பகுதியிலுள்ள பெரியார் சிலை அருகே பூச்சி மருந்தை குடித்துவிட்டு மயங்கிக்கிடந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்நிலையில், தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அஜய் விக்டர் சிகிச்சை பலனின்றி புதன்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்து கண்டோன்மென்ட் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

17 மாதங்களாகியும் 'திறக்கப்படாத' வாகன முனையம்!

நமது நிருபர்

திருச்சி, அக். 8: திருச்சி பஞ்சப்பூரில் ரூ.128.94 கோடியில் கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம், திறக்கப்பட்டு 17 மாதங்களாகியும் பயன்பாட்டுக்கு வராமலேயே உள்ளது.

திருச்சி மாநகரில் கனரக வாகனங்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கட்டப்பட்ட இந்த மையம் திறக்கப்படாததால், மாநகரின் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துக் கொண்டே உள்ளது. திருச்சி மாநகரின் இதயப் பகுதியாக உள்ள காந்தி சந்தை, மத்தியப் பேருந்து நிலையம், கீழரண் சாலையில் உள்ள கனரக சரக்கு வாகன முனையம் ஆகியவையே மாநகரப் போக்குவரத்து நெரிசலுக்கு பெரிதும் சவாலாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்தது.

எனவே இவை மூன்றையும் நகருக்கு வெளியே கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டு பஞ்சப்பூரில் பேருந்து முனையம் கட்டப்பட்டு கடந்தாண்டு மே மாதம் திறக்கப்பட்டது. இதேபோல, ரூ. 128.94 கோடியில் பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையமும் கடந்தாண்டு திறக்கப்பட்டது. ரூ. 236 கோடியில் காய்கனி, மலர்கள் விற்பனைக்கான ஒருங்கிணைந்த வளாகம் 22 ஏக்கரில் கட்டப்படுகிறது.

புதிய வளாகம் ஏன்?: திருச்சி மாநகரில் காந்திசந்தை, கீழரண் சாலை உள்ளிட்ட பகுதிகளில் நிற்கும் சரக்கு வாகனங்களால் நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்கும்விதமாக, பஞ்சப்பூரில் 38 ஏக்கரில் 246 கனரக வாகனங்கள் நிறுத்தும் வகையில் ரூ. 128.94 கோடியில் கட்டப்பட்ட கனரக சரக்கு வாகன முனையத்தை அப்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்தாண்டு மே மாதம் திறந்து வைத்தார்.

வசதிகள் என்னென்ன?: கனரக வாகனங்களை இயக்குவோரின் அலுவல் பணிக்கான 80 கடைகள், 107 கண்காணிப்பு கேமரா, 2 எல்இடி அறிவிப்புப் பலகைகள், வாகனங்களுக்கான மின்னணு கட்டண வசதி, 148 இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் நிறுத்துமிடம், கனரக வாகன ஓட்டுநர்களுக்கான தரைத்தளம், முதல் தளத்தில் 208 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வறைக் கட்டடம், கூடுதலாக சுகாதார வளாகம், 87 தனியார் ஆம்னி பேருந்துகள் வந்து செல்லும் வகையில் பேருந்துகள் நிறுத்துமிடமும் உள்ளது.

ஓயாத போக்குவரத்து நெரிசல்: பஞ்சப்பூரில் பிரதான மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பிறகும் மாநகரில் போக்குவரத்து நெரிசல் மட்டும் ஓயவில்லை. நகர எல்லைக்குள் கனரக வணிக வாகனங்கள் மற்றும் காய்கனி, பழங்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை செல்லத் தடை உள்ளது. மதியம் 1 மணி முதல் 4 மணி வரை மட்டும் செல்ல அனுமதி உண்டு. ஆனால், இந்த விதிமுறைகளை மீறி, கனரக வாகனங்கள் நகரின் முக்கியப் பகுதிகளில் நாள்முழுவதும் சுற்றித் திரிகின்றன. இதனால் நெரிசல் தவிர்க்க முடியாததாக உள்ளது.



பஞ்சப்பூரில் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு வராத அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் (கோப்பு படம்).

ஏலம் போகாத கடைகள்: பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தில் மொத்தம் 80 கடைகள் உள்ளன. மாநகராட்சி இந்த கடைகளுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.132 என வாடகை நிர்ணயித்து ரூ. 4 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை முன்பணமும் அறிவித்தது. கூடுதல் தொகை காரணமாக ஆரம்பத்தில் சில கடைகள் மட்டுமே ஏலம் போனதால், மாநகராட்சிக்கு மீண்டும் மறு டெண்டர் விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், புதிய சரக்கு வாகன முனையம் அருகே கட்டப்படும் ஒருங்கிணைந்த காய்கனி, பழங்கள் மற்றும் மலர்கள் சந்தை வளாகத்தின் பணிகள் முடியாத நிலையில், லாரி உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் இந்த முனையத்தைப் பயன்படுத்தத் தயங்குகின்றனர். எனவே, காய்கனிச் சந்தையின் ஒரு பகுதியை கடந்த ஜனவரி மாதம் திறந்து, அதன் மூலம் கனரக சரக்கு வாகன முனையத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வந்துவிடலாம் என்ற திட்டமும் கைகூடாமல் போனது. மேலும், காந்தி சந்தையின் ஒரு தரப்பு வியாபாரிகள் பஞ்சப்பூருக்கு வரமாட்டோம் என்கின்றனர். இதனால் 17 மாதங்களாகியும் சரக்கு வாகன முனையம் பயன்பாட்டுக்கு வராமலேயே உள்ளது.

மேயர் நம்பிக்கை: இதுதொடர்பாக, திருச்சி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன் கூறுகையில், கனரக சரக்கு வாகன முனையத்தில் உள்ள கடைகள் எதிர்பார்த்த அளவுக்கு ஏலம் போகாத தால் மறு ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பஞ்சப்பூரில் கட்டப்படும் காய்கனிச் சந்தையும் முடிவுக்கு வரவில்லை. தற்போது, மொத்த விற்பனை செய்யும் கடைகளுக்கான பணிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. சில்லறை விற்பனைக் கடைகள் கட்டும் பணி நடந்து வருகிறது. இரண்டு மாதங்களுக்குள் பணிகள் அனைத்தும் முடிந்துவிடும் என எதிர்பார்க்கிறோம். காய்கனிச் சந்தை வந்துவிட்டால் சரக்கு வாகனங்களும் புதிய முனையத்துக்கு வந்துவிடும் என்றார் அவர்.

பேத்திக்கு பாலியல் தொல்லை: தாத்தாவுக்கு வாழ்நாள் சிறை

திருச்சி, அக். 8: பேத்திக்கு பாலியல் தொந்தரவு அளித்த தாத்தாவுக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை விதித்து திருச்சி மாவட்ட நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் அருகே உள்ள பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியை அவரது தாத்தாவான மண்ணச்சநல்லூர் நொச்சியம் பகுதியைச் சேர்ந்த கே. ராமலிங்கம் (60) என்பவர் வீட்டில் வைத்து பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் ஜீயபுரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகாரளித்தார்.

இதன்பேரில், போலீஸார் போக்ஸோ பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து, ராமலிங்கத்தை கடந்த 10.07.2025 அன்று கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கு திருச்சி மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வியாழக்கிழமை நடைபெற்ற விசாரணையின் நிறைவில், குற்றவாளி ராமலிங்கத்துக்கு வாழ்நாள் சிறைத் தண்டனையும், ரூ. 5 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி சண்முகபிரியா தீர்ப்பளித்தார்.

திருச்சியை வறட்சிப் பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும்

குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் மனு

திருச்சி, அக். 8: திருச்சி மாவட்டத்தை வறட்சிப் பாதித்த பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் மனு அளித்தனர்.

திருச்சி கோட்டாட்சியரகத்தில், கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பொ. அய்யாக்கண்ணு கலந்து கொண்டு பேசியதாவது:

திருச்சி மாவட்டத்தை வறட்சிப் பாதித்த பகுதியாக அறிவிக்க அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரை செய்ய வேண்டும். மேலும், விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உறையூர் வாத்துக்காரர் தெரு பகுதியில் வசிக்கும் விவசாயிகள், பொதுமக்கள், தாங்கள் விளைவிக்கும் காய்கனிகளை அதே பகுதியில் விற்பதற்கு மாநகராட்சி நிர்வாகம் இடையூறு அளிக்கிறது. எனவே, மாநகராட்சிக்கு உரிய அறிவுரை வழங்கி விவசாயிகளுக்கு இடையூறாக இல்லாமல் விளைபொருள்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உய்யக்கொண்டான் வாய்க்காலில் நீதிமன்றம் அருகில் உள்ள ஆகாய தாமரைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதேபோல், பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இக் கூட்டத்தில் பங்கேற்று கோரிக்கை மனு அளித்தனர். மனுவைப் பெற்றுக்கொண்ட கோட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள், அந்தந்த துறைக்கு மனுக்களை அனுப்பி 15 நாள்களுக்குள் உரிய பதில் அளிப்பதாக உறுதியளித்தனர்.



திருச்சி ஆட்சியரக பின்புறம் உள்ள கோட்டாட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் பேசிய தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் பொ. அய்யாக்கண்ணு.

திருமணமான பெண்ணுக்கு பாலியல் மிரட்டல்: தம்பதி மீது வழக்குப் பதிவு

திருச்சி, அக். 8: திருச்சி அருகே திருமணமான பெண்ணுக்கு பாலியல் ரீதியில் மிரட்டல் விடுத்த தம்பதி மீது ஜீயபுரம் போலீஸார் வியாழக்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

திருச்சி மாவட்டம், குழுமணியைச் சேர்ந்த 22 வயது பெண்ணுக்கு, திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. இவர், உத்தமர்சீவியைச் சேர்ந்த சி. லட்சுமிகாந்தன் (33) என்பவருடன் நட்பாக பழகி வந்துள்ளார். அப்போது இருவரும் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை காண்பித்து மிரட்டி, அந்தப் பெண்ணை லட்சுமிகாந்தன் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அப்போது பெண்ணுக்கு தெரியாமல் எடுத்த புகைப்படத்தை காட்டி, அந்தப் பெண்ணை மீண்டும், மீண்டும் அவர் பாலியல் வன் கொடுமை செய்தாராம். தற்போது, லட்சுமிகாந்தனின் மனைவி கார்த்திகா (28) என்பவரும், அதேபோன்ற புகைப்படத்தைக் காட்டி அந்தப் பெண்ணை மிரட்டி வருகிறாராம்.

இதுகுறித்து ஜீயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அந்தப் பெண் வியாழக்கிழமை அளித்த புகாரின்பேரில், லட்சுமிகாந்தன், அவருடைய மனைவி கார்த்திகா ஆகிய இருவர் மீதும் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதைசாக்கடைத் திட்ட பணிகள் தீவிரம்

திருச்சி, அக். 8: திருச்சி மாநகராட்சிப் பகுதியில் விடுபட்ட பகுதிகளுக்கான புதைசாக்கடை திட்டப் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

திருச்சி மாநகராட்சியில் புதை சாக்கடைத் திட்டம் பகுதி 1 முடிந்த பிறகு, புதைவடிகால் திட்டம் பகுதி 2 இல் 19 வார்டுகளுக்கு ரூ. 377.29 கோடியில் பணிகள் நடந்து முடிந்து 34,159 புதை சாக்கடை இணைப்புகள் அளிக்கப்பட்டன.

தொடர்ந்து, திட்டம் பகுதி 3 இல் 15 வார்டுகளுக்கு ரூ. 425.72 கோடியில் பணி முடிக்கப்பட்டு, 38,061 புதைசாக்கடை இணைப்புகள் அளிக்கப்பட்டன. இதையடுத்து சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 30 வார்டுகளுக்கு ரூ. 210 கோடியில் பணி முடிந்து, 22,175 புதை சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டன. இந்நிலையில் விடுபட்ட பகுதிகளுக்கான புதைசாக்கடைத் திட்டம் ரூ. 230.61 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: திருச்சி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான புதைசாக்கடை 4 ஆவது பகுதி திட்டப் பணிகள் 8,25,46,55,56,63,64,65 ஆகிய 8 வார்டுகளில் மக்கள் பயன்பெறும் வகையில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் கடந்த 2025 ஆம் ஆண்டு முதல் நடைபெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 143.650 கி.மீ. நீள கழிவுநீர் குழாய்களில் 60.393 கி.மீ. நீள குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

35.080 கி.மீ. கழிவுநீர் உந்துகுழாய்களில் 8.301 கி.மீ. நீள குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. 5,872 ஆழ்நுழைவுத் தொட்டிகளில் 2,856 தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 9 கழிவுநீர் உந்து நிலையங்களில் 7 பணிகள் நடைபெறுகின்றன.

17 கழிவுநீரேற்று நிலையங்களில் 16 கழிவுநீரேற்று நிலையங்கள் கட்டப்படுகின்றன. 16,500 புதை சாக்கடை இணைப்புகளில் 7,305 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் வேகமாக நடைபெறுகின்றன என்றனர்.

குடிநீர் விநியோகத்தை தனியாருக்கு வழங்குவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருச்சி, அக். 8: குடிநீர் விநியோகத்தை தனியாருக்கு வழங்கும் முடிவை கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, திருச்சியில் செங்கொடி தொழிலாளர்கள் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தக் கோரி, தமிழ்நாடு முழுவதும் 4-ஆவது நாளாக நடைபெறும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆதரித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருச்சி மாநகர் செங்கொடி தொழிலாளர்கள் சங்கம் (சிஐடியு) சார்பில், திருச்சி மாநகராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் இளைய ராஜா தலைமை வகித்தார்.

மாவட்ட செயலர் மாறன் முன்னிலை வகித்தார். விவசாய சங்க மாவட்ட செயலர் கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரிய சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மருதை ராஜ், மாவட்ட பொறுப்பாளர் ராஜு ஆகியோர் கண்டன உரையாற்றினர். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பம்ப் ஹவுஸ் ஆபரேட்டர் பணியை ஒப்பந்தம் எடுத்துள்ள நிறுவனம், தங்கள் பணியாளர்களுக்கு ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக் கூலி ரூ.778-ஐ வழங்க வேண்டும். மாநகராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கான குடிநீர் வழங்கும் பணியை தனியாருக்கு வழங்கும் அரசாரணையை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில், சங்க நிர்வாகிகள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் என திரளானோர் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் சங்கத்தின் இன்றைய போராட்டம் வாபஸ்

ஸ்ரீரங்கம், அக். 8: ஸ்ரீரங்கத்தில் வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெறவிருந்த விவசாயிகள் சங்க போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம் வட்டத்துக்குள்பட்ட மேலூர் முதல் கிளிக்கூடு நடுக்கரை வரை உள்ள விவசாய நிலங்களை நாசம் செய்து வரும் காட்டுபன்றிகளை பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, வெள்ளிக்கிழமை சாலை மறியல், சனிக்கிழமை முற்றுகை போராட்டம் நடத்த விருப்பதாக விவசாயிகள் சங்கத்தினர் அறிவித்தனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை மாலை ஸ்ரீரங்கம் வட்டாட்சியரகத்தில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் ஸ்ரீரங்கம் பகுதி செயலர் வீரமுத்து, மாநகர் மாவட்ட செயலர் கார்த்திகேயன், திருச்சி வனச்சரக அலுவலர் சுப்ரமணியன் மற்றும் வருவாய், காவல் துறையினர் பங்கேற்ற ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.

இதில், வனத்துறை மூலம் காட்டுப் பன்றிகளை பிடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும், காட்டுப்பன்றிகள் தங்கும் காவிரி, கொள்ளிடம் ஆற்றுக்குள் இருக்கும் புதர்களை அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அலுவலர்கள் உறுதி அளித்ததை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன்: 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் சொக்கவாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுரிமன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தார்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தார்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்/ அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன்/ மொத்த நிலுவைத் தொகை
திரு.சிவகுமார் S C/O திரு.அப்பிரமணியன் திருமதி.முத்துலட்சுமி S C/O திரு.பெரியசாமி திருமதி. மணிமேகலை S C/O திரு. ராஜமாணிக்கம் திரு.கஸ்பிரமணியன் R C/O.திரு.ராமலிங்கம் (அனைவரின் குடியிருப்பு எண்.2-49, இருளர் தெரு, தேவனூர், அரியலூர், தமிழ்நாடு, 621806)	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தேவனூர் கிராமத்தின் நத்தம் பதிவு சர்வே எண்.241/29 (பழைய சர்வே எண்.241/1) இல் அமைந்துள்ள 130 சதுர மீட்டர் / 1398 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் அனுமதி கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து தன்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: சிமெண்ட் சாலை; தெற்கில்: ஒழுங்கை; கிழக்கில்: பாலகிருஷ்ணன், விநாயன் ஆகியோரின் வீட்டு மனை; மேற்கில்: சிவசாமி அவர்களின் வீட்டு மனை.	ரூ.3,50,000/- ரூ.35,000/- ரூ.10,000/-	30.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEJYKDM0427884 11.01.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.3,10,553/- மேலும் 12.01.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (07.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.4,31,552/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஆண்டனி மரியா வியோ 9715386558, சந்துரு 9629121731

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏததாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 29.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் இன்று சிறப்புக் கடன் மேளா

திருச்சி, அக். 8: திருச்சி மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் வெள்ளிக்கிழமை (அக்.9) சிறப்புக் கடன் மேளா நடைபெறும் என ஆட்சியர் பிரத்திக் தாயள் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது, மாவட்டத்தில் 40 வங்கி கிளைகள் மற்றும் இணைப்பு சங்கங்களாக 148 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுடன் செயல்படுகிறது.

இதன் மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான பயிர் சாகு